**செய்தி வெளியீடு எண்: 192** **நாள்: 14.03.2018**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 13.3.2018 அன்று தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மூலமாக திருவள்ளூர் மாவட்டம், திருமுல்லைவாயில் சிட்கோ தொழிற்பேட்டையில் 2 கோடியே 29 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உலகத்தரம் வாய்ந்த நேர்த்திமிகு மையக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், திருமுடிவாக்கம், கருப்பூர், வாழவந்தான் கோட்டை மற்றும் கப்பலூர் ஆகிய இடங்களில் உள்ள சிட்கோ தொழிற்பேட்டைகளில் 5 கோடியே 63 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 உலகத்தரம் வாய்ந்த நேர்த்திமிகு மையக் (Centre of Excellence) கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 24.7.2014 அன்று சட்டப்பேரவை விதி எண் 110 கீழ் வெளியிட்ட அறிவிப்பில், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மூலமாக திருவள்ளூர் மாவட்டம் – திருமுல்லைவாயில்; காஞ்சிபுரம் மாவட்டம் – திருமுடிவாக்கம்; சேலம் மாவட்டம் – கருப்பூர்; திருச்சிராப்பள்ளி மாவட்டம் – வாழவந்தான் கோட்டை மற்றும் மதுரை மாவட்டம் – கப்பலூர் ஆகிய 5 இடங்களில் மகளிருக்கென தனியாக இயங்கி வரும் தொழிற் பூங்காக்களில், மகளிர் தொழில் முனைவோர்கள் தங்களது தொழில் நடவடிக்கைகளை போட்டித் திறனுடன் மேற்கொள்ள, தொழில்நுட்பம், தொழில்திறன், விற்பனை உதவி ஆகியவைகளை மேம்படுத்தும் விதமாக உலகத் தரம் வாய்ந்த நேர்த்திமிகு மையம் அமைக்கப்படும் என்றும், இந்த நேர்த்திமிகு மையத்தில் பொது காட்சியகம் மற்றும் விற்பனை மையம், பொது வியாபார மையம், பொது கூட்ட அரங்கம், பொது பயிற்சிக்கூடம், நிர்வாக அலுவலகம், வங்கி, குழந்தைகள் காப்பகம் மற்றும் மருத்துவ மையம் போன்றவை அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, திருவள்ளூர் மாவட்டம், திருமுல்லைவாயில் சிட்கோ தொழிற்பேட்டையில் உள்ள மகளிர் தொழிற் பூங்காவில் 11834 சதுர அடி நிலப்பரப்பில் தரை மற்றும் முதல் தளத்துடன் 8552 சதுர அடி கட்டட பரப்பளவில் 2 கோடியே 29 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

கட்டப்பட்டுள்ள உலகத்தரம் வாய்ந்த நேர்த்திமிகு மையக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், காஞ்சிபுரம் மாவட்டம் – திருமுடிவாக்கம் சிட்கோ தொழிற்பேட்டையில் உள்ள மகளிர் தொழிற் பூங்காவில் 2 கோடியே 27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; சேலம் மாவட்டம் – கருப்பூர் சிட்கோ தொழிற்பேட்டையில் உள்ள மகளிர் தொழிற் பூங்காவில் 1 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திருச்சிராப்பள்ளி மாவட்டம் – வாழவந்தான் கோட்டை சிட்கோ தொழிற்பேட்டையில் உள்ள மகளிர் தொழிற் பூங்காவில் 1 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; மதுரை மாவட்டம் – கப்பலூர் சிட்கோ தொழிற்பேட்டையில் உள்ள மகளிர் தொழிற் பூங்காவில் 1 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்;

என மொத்தம் 7 கோடியே 92 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 உலகத்தரம் வாய்ந்த நேர்த்திமிகு மையக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடுத் துறை அமைச்சர் திரு.க. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முதன்மைச் செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் செல்வி அபூர்வா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 14.3.2018